DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT JUDGE, ERODE.
**O.S.No.** 139/2023

Deposition of Witness : PW. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணராஜ் | த/பெ. | : | துரைசாமி |
| கிராமம் | : | கந்தசாமிபாளையம் | தாலுகா | : | ஈரோடு |
| தொழில் | : | வங்கி உதவி மேலாளர் | வயது | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 06-04-2026.

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை (சாட்சி வழக்கறிஞரால் அடையாளம் காட்டப்பட்டார்)

பிரதிவாதி விவசாய அபிவிருத்திக்காக தான் எங்கள் வங்கியில் கடன் வாங்கினார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கடன் வழங்கிய சமயத்தில் நான் வாதி வங்கியில் பணியாற்றவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் அடிப்படையில் தான் பிரதிவாதி வாங்கிய கடன் விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். கடன் வழங்கும் போது 6 சதவீதம் வட்டி வழங்கினால் போதும் என்று பிரதிவாதியிடம் சொல்லிவிட்டு தற்பொழுது அதிகப்படியான வட்டி கோரியுள்ளோம் என்றால் தவறு. 1ம் பிரதிவாதி பல தவணைகளில் கடன் தொகையை திரும்ப செலுத்தியுள்ளார் என்றும், அதற்கான ரசீதுகள் மற்றும் கணக்கு பட்டியலை நாங்கள் அவருக்கு வழங்கவில்லை என்றும் சொன்னால் தவறு, இரண்டுமுறை கடன் தவணையை செலுத்தியுள்ளார், அவைகள் கணக்கு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பணம் செலுத்தும்போதே அதற்கான ஸ்லிப்பை பிரதிவாதியிடம் கொடுத்துள்ளோம். 12–10–2018ம் தேதியில் பிரதிவாதி ஒப்புகை கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் தவறு, அவர் கொடுத்துள்ளார். இந்த பிரதிவாதிக்கு கடன் நிவார்னசட்டம் பொருந்தும் என்றால் தவறு. 11–10–2018ம் தேதிக்கு பிறகு பிரதிவாதி கையொப்பம் செய்து எந்தவொரு ஆவணத்தையும் வாதி வங்கிக்கு கொடுக்கவில்லை என்றால் தவறு. பிரதிவாதி முடிந்தவரை தவணை தொகைகளை செலுத்திவந்துள்ளார் என்றும், கொராணா பெருந்தொற்று காரணமாக கடன் தொகையை செலுத்த முடியாத சூழ்நிலை பிரதிவாதிக்கு ஏற்பட்டுவிட்டது என்றும் சொன்னால் தவறு. நான் மிக அதிகப்படியாக வட்டி கோரியுள்ளேன் என்றால்

V SURESH Digitally signed by V SURESH Date: 2026.04.06 19:02:32 +0530

தவறு. இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் எதுவும் இல்லை என்றால் தவறு. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் தவறு.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V SURESH Digitally signed by V SURESH Date: 2026.04.06 19:02:39 +0530
II Addl. District Judge, Erode.